# ஆனையிறவு முகாமைச்சூழ தொடர்ந்து விமானத் தாக்கு

## முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமிற்குப் பாதுகாப்பு வழங்கும் முகமாக ஹெலிக்கொப்டர்கள், குண்டுவீச்சு விமானங்கள், பயணிகள் விமானங்கள் நேற்றும் நேற்று முன்தினமும் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்தவண்ணம் உள்ளன. இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல் அகோரமான முறையில் மேற்கொள்ளப்பட்டதாகவும், இடையிடையே சரமாரியான துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு ஹெலிக்கொப்டர்கள் பாதுகாப்பு வழங்குவதற்காகத் தொடர்ந்தும் முகாம் சூழவுள்ள பகுதிகளை நோக்கிக் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகிறது. நேற்றுக்காலை 8. 30 மணியளவில் குண்டுவீச்சு விமானங்களில் இருந்து எரிகுண்டுகளும் வீசப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. 79 (ப 11)


பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 224 பிரசோற்பத்தி ஆனி 26 (10 - 07 - 1991) புதன்


★ ஆயுதப் பறிமுதல் தொடர்பான விவகாரம்

# ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக

# தாய்வான் வழக்குத் தாக்கல்

## பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படலாம் என தாய்வான் எச்சரிக்கை!

**கடந்த வருடம் மதலினா என்ற பெல்ஜியக் கப்பல் மூலம் தாய்வானுக்குச் சென்று கொண்டிருந்த ஆயுதங்களை இலங்கைச் சுங்கத் திணைக்களம் கப்பலில் இருந்து பறிமுதல் செய்ததை ஆட்சேபித்து தாய்வான் அரசு இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளது.**

தாய்வான் தனது விமானப் படைக்கென பெல்ஜியம் நாட்டிலிருந்து கடந்த வருட இறுதியில் பதினொராயிரம் ரொக்கட்டுகளை கொள்வனவு செய்திருந்தது. இவை ஹெலிகப்டர்களுக்கு பொருத்தப்படும் ஆயுதங்களாகும்.

இவற்றை ஏற்றிவந்த பெல்ஜியக் கப்பலான 'மதலீனா' எரிபொருள் நிரப்புவதற்காக கொழும்புத்துறைமுகத்தில் தரித்தது.

அப்போது கப்பலை சோதனையிட்ட இலங்கை [illegible]

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கடும் சோதனை

கொழும்பு குண்டு வெடிப்பையடுத்து வட பகுதியிலிருந்து கொழும்பு செல்லும் லொறிகள் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருகிறது

வவுனியாவில் சோதனைகளுக்காக தடை முகாமில் மணித்தியாலக் கணக்காக லொறிகளும் வாகனங்களும் கியூவில் நிற்பதைக் காண முடிகிறது.

வவுனியாவில் சோதனை முடிந்த பின்னர் கொழும்பு நோக்கிச் செல்லும் லொறி

—04 ஆம் பக்கம் பார்க்க

## படையினரிடம் சிக்கியவர்களுக்கு ஒய்வூதியம்

காரைநகரில் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டவர்களுள் ஒய்வூதியக் கொடுப்பனவுபெறுபவர்களுக்கான ஒய்வூதியப் பணம் யாழ்ப்பாண செயலகத்தில் இருந்து இன்று 10-ம் திகதி அனுப்பப்படவிருக்கின்றது. (19)

## கிளிநொச்சி நோயாளிகள் அவதி

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் பன்டேஜ், பஞ்சு மற்றும் பொருள்கள் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் காயத்திற்குள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## திக்கோட்டையில் மூவர் படையினரால் கொலை

மட்டக்களப்பு பெரியபோரதீவு முகாம் இராணுவத்தினரும் டெலோ குழுவினரும் நேற்று முன் தினம் திக்கோட்டை கிராமத்தைச் சுற்றிவளைத்தனர்.

சுற்றிவளைப்பின்போது நான்கு பிள்ளைகளின் தந்தை மற்றும் இரு இளைஞர்களை படையினர் சுட்டும் வெட்டியும் கொன்றனர்.

## மன்னார்த் தீவுமுழுவதும் மினி ராணுவ முகாம்கள்

மன்னார்த்தீவில்மினிமுகாம்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னாரிலிருந்து தலைமன்னார் வரை பதின்மூன்று மினி முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து இடங்களில்பொதுமக்கள் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர்,

இதே போல மன்னாரிலிருந்து தாழ்வு பாடு வரை மினி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் ஒருமைல் தூர இடவெளியில் சகல மினி முகாம்களும் அமைக்கப்பட்டு பொலிஸாரும் இராணுவத்தினரும் காவல் புரிகின்றனர். (38)

## கொக்கட்டிச்சோலைக் கொலை

## பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவில்லை

சென்றமாதம் கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற படுகொலை எங்களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளித்துள்ளது. இந்த சம்பவத்தை விசாரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ள போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக எவ்வித நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை. அவர்களுக்கு நிவாரணம் துரிதகதியில் அளிக்கப்பட வேண்டுமென ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

இப்படியான கோரச் சம்வங்கள் நடப்பதற்கு முக்கிய காரணம் குற்றம் இழைப்பவர்கள் அரசைச் சார்ந்தவர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## குமுதினிப் படகை கடற்படை எடுத்துச்சென்றது

குறிகாட்டுவான் நெடுந்தீவு இறங்குதுறைகளுக்கிடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவந்த ஒரே யொரு அரசாங்கத்துக்குச் சொந்தமானபடகான குமுதினி பழுதடைந்ததினால் கடற்படையினர் இதைப் பொறுப்பேற்று காரைநகருக்குக் கொண்டு சென்றுள்ளனர். (19)

## மலையக மக்கள் முன்னணி

## கட்சித் தொண்டர்கள் தொடர்ந்து கைது

மலையக மக்கள் முன்னணி கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் அனைவரும் மலையகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்படுகின்றனர்.

கூட்டுப்படை குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்களுக்கும் இக்கட்சியினருக்கும், தொடர்பு இருப்பதாகக் கருதப்படுவதினாலேயே இவர்கள் கைது செய்யப்படுவதாகப் பொலிஸார் தெரி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சந்தேகநபரின் 'கண்' கண்டுபிடிக்கப்பட்டதாம்!

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மேலும் இரு இலங்கைத் தமிழர் சென்னையில் கைதாகியுள்ளனர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயன் (26) அவரது மாமனார் பாஸ்கரன் (52) ஆகியோரிடமிருந்து தேடப்படும் முக்கிய நபராகக் கருதப்படும் சிவராஜன் அணியும் ஒற்றை செயற்கை கண்ணும், வயர்லெஸ்சும் மீட்கப்பட்டதாம்.

இவர்களுடன் ராஜீவ் கொலை தொடர்பாக 12 பேர் கைதாகியுள்ளனர். இவர்களில் 7பேர் இலங்கைத் தமிழர்களாவர்.

## வோய்ஸ் ஒப் அமெரிக்கா சிலாபம் ஆயர் அனுமதி?

வோய்ஸ் ஒப் அமெரிக்க வானொலியின் அஞ்சல் நிலையம் சிலாபம், நாத்தாண்டிய பகுதியிலுள்ள இரணவில என்ற இடத்தில் அமைக்கப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் ஊரடங்கு

மன்னார்த்தீவு நீங்கலாக மன்னார் மாவட்டத்தில் நேற்றுக்காலை 9 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக நேற்று நண்பகல் அறிவிக்கப்பட்டது.

# கொழும்பு நகரில் நடந்த கார்-மோட்டார்சைக்கிள் ஓட்டம்!

திரைப்படங்களில் வரும் காரோட்ட சாகஸங்களைப் போன்ற சம்பவம் கடந்த சனியன்று கொழும்பில் இடம் பெற்றது.

நண்பகல் சங்கராஜ மாவத்தையில் ஆரம்பித்த இந்த சாகஸம் கிராண்ட்பாஸ் வீதி பலாமரச்சந்தி புதுப் பாலம் வரை நீடித்தது.

சங்கராஜ மாவத்தையில் வந்து கொண்டிருந்த வெள்ளைநிற டட்சன் கொரெல்லா கார் ஒன்றை பொலிஸார்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலி சூடு

நேற்மாலை4மணிக்கும்6மணிக்குமிடையில் தெல்லிப்பழை புன்னாலைக்கட்டுவன், மல்லாகம் பகுதிகளிலும் தென்மராட்சியில் கைதடி, நாவற்குழிப்பகுதிகளிலும் ஹெலிக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## நினைவஞ்சலி



வீர ஜனனம்: 01 05 1965

வீர மரணம்: 20 06 1991

### வீரவேங்கை கப்டன் விஜி

(ஐ. சிவஞான செல்வம்)

(நல்லூர் - சாமிப்புலம் - பூநகரி)

அந்நியர் ஆட்சி போக்க
அடிமை விலங்கு ஒடிக்க
தமிழீழ மண்ணை மீட்க
சீறும் புலியென வீரகளம் புகுந்தவனே!
உனது இறுதி இலட்சியம்
நிறைவேறும் நாள் வெகுதூரம் இல்லை.

வவுனியா சிங்கள இராணுவத்துடன் தம்பனை எனும் இடத்தில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த கப்டன் விஜிக்கு எமது அஞ்சலிகள்.

— பூநகரி மக்கள்

07049

## மாணவர் நூலகம்

மட்டுவில் தெற்கு சாந்த நாயகி வித்தியாசாலை மாணவர்கள் தமக்கென அரிய நூல் நிலையம் ஒன்றினை அமைத்துள்ளனர்.

## வேவிலந்தை அம்மன் உற்சவம்

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26ஆம் திகதி தேர், தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும். (38)


## சிறு விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள சமையல் உதவியாளர், பரிசாரகர் தேவை. (பெண்கள் மட்டும்) உடன் நேரில் வரவும். நேரம் 9 - 12 மணி வரையும். இடம்பெயர்ந்தவர்களுக்குமுன்னுரிமை வழங்கப்படும். ஜோ. எகட்டன், ஜெசித்தாரா உள்ளூர் உணவகம், சுண்டுக்குளி மகளிர்கல்லூரி முன் ஒழுங்கை, 19/3 கொழும்புத்துறை சாலை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

07044


உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருஷம் ஆனி மாதம் 28 ஆம் நாள் (12 07. 1991) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.36மணி முதல் 10-48மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| சாவகச்சேரி | நல்லூர் |
| --- | --- |
| திரு. வி. சின்னையா தம்பதிகளின் புத்திரன் | திரு.கா. உருக்திராபதி தம்பதிகளின் ஏக புத்திரி |
| திரு நிறை செல்வன் | திரு நிறை செல்வி |
| **பாலநாதன்** (Water Resources Board) Jaffna | **கல்பனாபதி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணம் நடைபெற இருப்பதனால் அத்தருணம் சுற்றத்தவர்கள், நண்பர்கள், நன்மை விரும்பியவர்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆசிர்வதித்தேகுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நிகழும் இடம்;

திவ்ய ஜீவன சங்க மண்டபம்
(சட்டநாதர் கோவிலுக்கு அருகாமையில்)
நல்லூர்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி வி. சின்னையா
பிரசித்த நொத்தாரிஸ்,
''சிவபதி''
சங்கத்தானை,
சாவகச்சேரி.

திரு திருமதி, கா உருத்திராபதி
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)
28, நாயன்மார் வீதி,
நல்லூர்

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை,

07050


## தொழிற்பயிற்சிகள்

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இலகுவாகத் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் குறைந்த காலத்தில் பயிற்சிகள் பெற ஓர் அரிய சந்தர்ப்பம்!

★ றேடியோ, T. V, வீடியோ, டெக் றிப்பியறிங்
சகல இன் றேடியோ, ரெலிவிஷன், வீடியோ, டெக் தொழிற்பாடு, திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். காலம் : 5மாதம்

★ றீவைண்டிங்
மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சாரப் பொருட்கள் றீவைண்டிங் செய்தல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். காலம் : 3மாதம்

★ எலக்ரிக்கல் வயறிங்
வீட்டுமின்சாரவேலை, மின்சாரப்பொருட்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். காலம் : 2மாதம்

★ Diploma in Draughtsmanship
(a) Engineering Drawing
(b) Engineering Construction
(c) Engineering Materials
(d) Builders Quantities
(e) Draughtsmanship

★ Computer Programming
BASIC LANGUAGE, COBOL, d BASE III + என்பன பயிற்சி அளிக்கப்படுகின்றன.

★ Engineering Drawing
(a) Mechanical Drawing (b) Geometrical Drawing
காலம் : 3 மாதம்
பொறியியல் பீட 1ஆம் வருட மாணவர்களுக்காக விசேடமாக பயிற்சியளிக்கப்படுகின்றன.

★ Air Condition & Refrigeration Engineering
சகல இனக்குளிர்சாதனங்களும் எந்தநாட்டிலும் திருத்தக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படும். காலம் : 4 மாதம்

★ Spoken English

★ புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்:-
15-07-91 (கிழமை நாட்கள்), 14-07-91 (சனி, ஞாயிறு)

### Jaffna Technical Institute

Stanley Road, Jaffna.

(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

குறிப்பு:- Computer பயிற்சியை கிளை நிறுவனத்திலும் பெறலாம்.

(1) Brillian Institute
Chavakachcheri.

(2) Modern Education Center,
Nelliyady, Karaveddy.

(3) Vinyls Institute
K. K. S. Road, Chunnakam.

07035



## ஒரு நிமிடம்!

உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது

ஜோ. எகட்டனின்

### ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

உங்கள் மனையில் இருந்தபடியே உணவுண்ணும் நிலை

காரணம் வருகை தந்தவர்கள் அறிவார்கள்

அமைதியான சூழல், நிறைவான உபசரிப்பு. சுத்தம், சுகாதாரம், இவற்றிற்கு முதலிடம், ஒரு காலைப் பொழுதையோ, பகல்ப் பொழுதையோ, மாலைப் பொழுதையோ கழிக்க ஒரு முறை வருகை தந்து பாருங்களேன்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா உணவகத்திற்கு

அறுசுவை அங்கே உங்களுக்காக காத்திருக்கும்

### ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

சுண்டுக்குளி மகளீர் கல்லூரி முன் ஒழுங்கை

19/3, கொழும்புத்துறைச்சாலை
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

எடுத்துச் செல்லக்கூடிய உணவுப் பொட்டலங்கள்

விலை ரூபா 29 - 50 மட்டும்

விளம்பர அமைப்பு

செனித் விளம்பர முகவர்

07041

முரசொலி

எமது சிந்தனை

10. 07 1991

## தமிழகமா இதைச் செய்கிறது?

ஒரு நாட்டில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டால், அல்லது போர் நிகழ்ந்தால் அவற்றினால் உயிருக்கு ஆபத்து வருமென அஞ்சும் மக்கள் புகலிடம் தேடி அயல் நாடுகளுக்கு ஓடுவது வழக்கம்.

சீனா திபேத்தை ஆக்கிரமித்த போது திபேத்திய மக்களும் அவர்களின் ஆத்மீகத் தலைவர் தலாய்லாமாவும் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். கடந்த முப்பது வருடங்களாக இந்தியா அவர்களுக்குப் புகலிடம் அளித்து வருகிறது

இரண்டாவது உலகப் போரின் பின் இஸ்ரேல் உருவாக்கப்பட்ட போது பாலஸ்தீனியர்கள் அயல் நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தார்கள். கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக அங்கு இருக்கிறார்கள்.

பாகிஸ்தான் இராணுவம் கிழக்குப் பாகிஸ்தானில் (இப்போது வங்காளதேசம்) மக்களைக் கொன்று குவித்த போது லட்சக்கணக்கான மக்கள் இந்தியாவுக்கு ஓடினார்கள். இந்தியா அவர்களை ஆதரித்தது மின்றி வங்காளதேசத்தை உருவாக்கிக் கொடுத்தது.

ஈராக்கிய அரசு குர்திஷ் மக்களுக்கெதிராக இராணுவ நடவடிக்கை எடுத்து அவர்களுக்குப் பேரழிவை உண்டாக்கிய போது அவர்கள் துருக்கியிலும் ஈரானிலும் தஞ்சம் புகுந்தார்கள். அவர்களை அந்த அரசுகள் ஆதரித்தன. இப்போது குர்திஷ் மக்களுக்கு ''குர்திஷ்தான்'' அரசு உருவாகப் போகிறது.

அகதிகளாக வருவோருக்குத் தஞ்சம்அளிப்பது சர்வதேச நாகரிகம்; மனிதாபிமான கடமையும் கூட. உயிரைப் பாதுகாப்பதற்கு ஓடிவருபவர்களை அணைத்து, ஆதரிப்பது தனிமனித பண்பாடு மட்டுமன்றி அரசுகளின் பண்பாடும் கூட.

இந்தப்பண்பும், கடமை உணர்வும் தமிழக அரசிடம் இருக்குமென்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன்தான் இலங்கைத் தமிழர்கள் தமிழகத்துடன் தமக்குள்ள பண்பாட்டுத் தொடர்பின் பேரால் அங்கு புகலிடம் கேட்டு ஓடினார்கள்.

வந்தோரை வரவேற்கும் தமிழகம் இப்போது என்ன செய்கிறது? சிங்கத்தின் வாயிலிருந்து தப்புவதற்காக உயிரைக் கையில் பிடித்துக் கடல் கடந்து வந்தவர்களை மீண்டும் சிங்கத்தின் வாயில் திணிக்கப் போவதாகச் சபதமிடுகிறது.

அ.தி.மு.கவைச் சார்ந்தவர்களும் இந்திரா காங்கிரசைச் சார்ந்த தலைவர்களும் இலங்கை அகதிகள் மீது பகைமையுணர்வோடு பேசுகிறார்கள். அகதிகளுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டுள்ளார்கள். அகதிகள் தாக்கப்பட்டுள்ளார்கள். வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. பலர் கொல்லப்பட்டுள்ளனர்

அகதி முகாம்களில் சிறைக் கைதிகள் போல் வாழ்கிறார்கள். சகலரும் பெயர் பதிய வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீலங்கா அரசு கொழும்புத் தமிழர்களைக் கட்டாயப்படுத்துவது போலத் தமிழர்களைப் பதிவு செய்யும்படி தமிழகமும் நிர்ப்பந்தம் பிரயோகிக்கிறது.

கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலாக, ஓடுகின்ற பாய் மரத்தின் காகமாகத் திக்குத் தெரியாது, திசையறியாது ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடுமைக்காற்றாது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அங்கேபோன இலங்கைத் தமிழர்களுக்கு அங்கேயும் இந்தக்கதியா?

சத்தியம், தர்மம், சாந்தி, அஹிம்சை ஆகியவை மஹாத்மாவோடு மறைந்து விட்டனவா? பஞ்சசீலத் தத்துவங்கள் நேருவின் சமாதிக்குள் அடங்கி விட்டனவா?

ஜெயலலிதா அகதிகள் விடயத்தில் தினம் ஒரு அறிக்கை விடுகிறார். தமிழக அரசுக்குள் ஒரேயொரு பிரச்சினை அகதிகள் பிரச்சினை தான் என்பது போல அவரின் பேச்சும் செயலும் உள்ளன.

எம். ஜி. ஆரின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் ஜெயலலிதா எம். ஜி ஆர் இப்போது இருப்பின் என்னவகையில் அணுகுவார் எனச் சிந்தித்துப் பார்த்தாரா?

ஈழத் தமிழர் மீது பற்றும் பாசமும் கொண்ட அவர், தமிழீழ விடுதலை வேட்கைக்கு உரமூட்டிய அந்த மாமனிதர் அகதிகளை அணைத்து ஆதரித்திருப்பார்.

வாழப்பாடி தமது பங்குக்குக் கூக்குரல் எழுப்புகிறார். மூப்பனாரின் முதுகில் குத்தி முன்னுக்கு வந்து அமைச்சரானவர், தனது நிலையைப் பலப்படுத்த தமிழக மக்களைத் திசை திருப்புகிறார். ஈழத்தமிழ் அகதிகள் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளில் பல்லாயிரக் கணக்கில் வாழ்கிறார்கள்.

தஞ்சம் கிடைக்குமென நம்பித் தமிழ் நாட்டுக்குப் போன ஈழத்தமிழர்களுக்கு நிகழும் அவமரியாதையும் இன்னல்களும், மரண அபாயமும் அவர்களுக்கு நிகழவில்லை.

இதில் குறிப்பிடத்தக்க அம்சமென்னவெனில் ஈழத் தமிழ் அகதிகளை வெளியேற்ற வேண்டுமெனக் குரல் எழுப்புவது தமிழர்களே! வேறு மாநிலத்தவர்கள் அல்ல.

வந்தாரை வாழ்வித்த தமிழ்நாடு என்பதெல்லாம் வரலாறாய்ப் போய் விட்டதா?

### 'வன்னிவிக்ரம-2' பற்றிக் கொழும்புப் பத்திரிகை!

### புலிகள் குறுகிய தூரத்தில் நேரடியாக நின்று

# கடும் தாக்குதல் தொடுத்தனர்!

கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை வவுனியா மேற்குப் பகுதியில் பூவரசங்குளம் தொடக்கம் பறையனாலங்குளம் வரையிலான 13 மைல் தூரப் பிரதேசத்தில் இடம் பெற்ற 'வன்னிவிக்ரம - 2' என்ற இராணுவ நடவடிக்கையின்போது புலிகளின் எதிர்த்தாக்குதல் கடுமையாக இருந்ததாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

பூவரசங்குளம் சந்திக்கருகில் முதல் நாள் இடம்பெற்ற மோதலில் 20 யார் தூரத்தில் நின்று புலிகள் மோதியதாகவும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹெலிகப்டர்களின் உதவியுடன் படையினர் யுத்தத்தில் ஈடுபட்ட போதிலும் புலிகள் ஹெலிகப்டர்களை நோக்கித் தாக்குதல்களை நடாத்தியதில் ஒரு ஹெலிகப்டர் வீழ்ந்து நொருங்கியதாகவும், மற்றொரு ஹெலிகப்டர் சேதமடைந்து உடனடியாக வவுனியா முகாமில் தரையிறக்கப்பட்டதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

மிதிவெடிகள், கண்ணிவெடிகள் இன்றிக் குறுகிய தூரத்தில் நின்று நேரடியாகப் புலிகள் படையினருடன் மோதித் தங்கள் போர் வலிமையைக் காட்டியுள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன, (38)

## ஆங்கில ஆசிரியர் தெரிவு; 4 பாடங்களில் போட்டிப் பரீட்சை

ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை இம்மாதம் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தெரிவு செய்யப் படுபவர்கள் மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவர்.

தெரிவுப்பரீட்சை கிரகித்தல், மொழி அறிவு, மொழி ஆட்சி, எழுத்தாற்றல் ஆகிய நான்கு பாடங்களும் மூன்று மணித்தியாலங்களுக்கும் நடைபெறும்.

இவற்றில் எழுத்துப்பரீட்சையில் பெறும் புள்ளிகள் விசேடமாகக் கணிக்கப்படும் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் இவர்கள் பின்னர் பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

பயிற்சியை திருப்தி கரமாகச் செய்தவர்களுக்கே நியமனம் கிடைக்கும்.

## மோசடி பிரிவுக் கான்ஸ்டபிள்

## மோசடி செய்து பதவி பெற்றார்

மோசடிக் கல்விச் சான்றிதழைச் சமர்ப்பித்து பொலிஸ் சான்ஸ் டபிள் உத்தியோகம் பெற்ற நபர் ஒருவர் இரண்டு வருட சேவையின் பின் கண்டு பிடிக்கப்பட்டார்

கோட்டைமோசடிப்பொலிஸ் பிரிவைச் சேர்ந்த குணரத்ன பண்டா என்ற பிரஸ்தாப கான்ஸ்டபிள் கோட்டை நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டு தண்டனை இம்மாதம் 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்தி பெறாத பண்டா சான்றிதழில் சித்திபெற்றுள்ளதாக மாற்றம் செய்திருந்தாராம். (38)

## நாளை பூரண சூரிய கிரகணம்; ஆனால் இலங்கையில் தென்படாது

பூரண சூரிய கிரகணம் ஒன்று நாளை 11 ஆம் திகதி ஏற்படுமெனக் கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது,

2 மணித்தியாலயம் 25 நிமிடங்கள் வரை நீடிக்கும் இப்பூரண சூரிய கிரகணம் இலங்கையில் தென்படாது.

இலங்கை நேரப்படி இரவு கிரகணம் 9.58 முதல் இரவு 12.13 வரை நீடிக்கும்.

## கோட்டை முனீஸ்வரன் அபிஷேக விழா

யாழ் கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தான மணவாளக் கோல அபிஷேக விழா எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

தொடர்ந்து 18நாள்களுக்கு தினமும் பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி 4.00 மணிக்கு விசேட பூசை நடைபெற்று பின்னர் வீதிவலம் இடம்பெறும்.

18ஆம் நாள் மாலை இரதபவனி இடம் பெறும்.

## ராஜீவ் கொலையாளிகளைப் பிடிக்க கம்பியூட்டர்களின் உதவி

ராஜீவ்காந்தியைக் கொன்றவர்களைக் கைதுசெய்ய இந்திய விசேட புலனாய்வுக்குழு நவீன முறையில் கம்பியூட்டர்களைப் பயன்படுத்தி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் எந்த வேடத்தில் இருந்தாலும் அவர்களை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ளக் கூடியதாக பல்வேறு நிலையிலான உருவப்படங்கள் கம்பியூட்டர்களின் உதவியுடன் வரையப்பட்டு எல்லாப் பொலிஸ் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் உள்துறை அமைச்சின்கீழ் செயற்படும் 'தேசியதினம் ரிகார்டு' இப்படிவப் படங்களை உருவாக்கி வெற்றியடைவதில் கடந்த ஒரு வருட காலமாக சிறந்த தொழில் நுணுக்கத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தெ. ஆபிரிக்காவில் மீண்டும் கலகம்

## ஐவர் சுட்டுக்கொலை; பலர் படுகாயம்

தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு மீண்டும் வன்செயல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

நேற்று முன் தினம் அங்கு ஏ. கே. 47 ஆயுதத்தை ஏந்திய கறுப்பினத்தவர்கள் சிலரால் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 14 பேர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை தென்னாபிரிக்கா மீதான பொருளாதாரத்தடை தொடர வேண்டுமென ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரமுகர் நெல்சன் மண்டேலா விருப்பம் தெரிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

திலீபன் நினைவு தடகள (மெய்வல்லுநர்) போட்டிகள் சம்பந்தமான கலந்துரையாடல் 11 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 9 மணிக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, யாழ் மாவட்டச் செயலகம் கோண்டாவிலில் நடைபெற இருக்கின்றது

சகல விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், வட்டவை ரீதியாக நியமிக்கப்பட்ட விளையாட்டுப் பொறுப்பாளர்கள், மற்றும் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக்குழு உறுப்பினர்கள் தவறாது சமுகம் கொடுக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. வரும்போது தடகள போட்டிகளுக்கான விண்ணப்பங்களையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பொருளாதாரத் தடையால் ஈராக்கில் பஞ்சம் ஏற்படும் நிலை

ஈராக் மீதான பொருளாதாரத் தடையை உடன் நீக்காவிடில் அங்கு கடும் பஞ்சம், கொள்ளை நோய் என்பன ஏற்படுமெனச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமும், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமும் எச்சரித்துள்ளன.

குவைத் மீது ஈராக் படையெடுத்ததைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை விதித்த பொருளாதாரத் தடை அங்கு கடந்த பதினொரு மாத காலமாக அமுலில் இருந்து வருகின்றது.

## கதிர்காம உற்சவம் ஆரம்பம்

## இந்துப் பக்தர்கள் வருகை குறைவு

கதிர்காமம் உற்சவம் இம்மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

27ஆம் திகதிவரை உற்சவம் தொடர்ந்து இடம்பெறும்.

நாட்டின்நிலைவரம் காரணமாக இவ்வருடமும் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து இந்துப் பக்தர்கள் கதிர்காம யாத்திரையை மேற்கொள்வது மிகக்குறைவாகவே இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆயிரத்து ஐந்நூறுரூபாவுக்குட்பட்ட வருமானம்கொண்ட

# இடம் பெயர்ந்தோருக்கு தொடர்ந்தும் நிவாரணம்

ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குட்பட்ட வருமானம் கொண்ட இடம் பெயர்ந்த குடும்பங்கள்முகாமிலோஅன்றி வெளியில் இருந்தாலும் அவர்களுக்கு மூன்று வார விநியோகம் செய்யப்பட வேண்டுமெனயாழ் செயலகத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு இரண்டு வார விநியோகத்தை ஒரே முறையில் வழங்கவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

தொழில் பாதிப்புற்றவர்களுக்கு இலவச உலர் உணவு நிவாரணம் ஒரு வாரத்துக்கு வழங்க வேண்டுமெனவும், ''உ'' அட்டை உடையவர்களுக்கு ஒரு வாரத்திற்கான பொருள்கள் பணத்திற்கு வழங்கப்படும்.

இம் முறை அட்டவணையில் கொடுக்கப்பட்டபொருள்களையன்றிநுகர்வோர் விருப்பம் தெரிவிக்கும் பொருள்களை வழங்கும் படியும் நுகர்வோரைக் கட்டாயப்படுத்தி பொருள்களை விற்பனை செய்ய வேண்டாம் எனவும் கேட்டுள்ளார், 74

## தீவகத்தில் மீண்டும் திணைக்களங்கள் இயங்கும்

தீவகத்தில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச்சென்று இயங்கிவந்த சகல அரசாங்கக் கூட்டுத்தாபன திணைக்களங்களினது காரியாலயங்கள் பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பன கடந்த திங்கள் முதல் மீண்டும் தீவகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன.

கடந்த பல மாதங்களாக இயங்காமல் இருந்து வந்த ஊர்காவற்றுறை மாவட்ட அரசாங்க வைத்தியசாலையும் நேற்று முன்தினத்தில் இருந்து இயங்கத் தொடங்கியுள்ளது,

பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் ஆசிரியர்களினது வரவு திருப்தியாக இருந்த போதும் மாணவர்களின் வருகை குறைவாக இருந்தது ஆனால் சென்றதிங்கட்கிழமை முதல் மாணவர்களினது வருகை அதிகரித்து வருகிறது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவும் புங்குடுதீவு, வேலணையில் இயங்கி வருகின்றன. உலர் உணவு நிவாரணங்களும் இங்கேயே வைத்து கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன (19)

### இந்தியப் பாராளுமன்றம்

## சபாநாயகர் பதவிக்கு மூவர் போட்டியிடுகின்றனர்

பத்தாவது இந்தியப் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது ஒன்றரை வருடங்களின் பின் ஆளும் கட்சி ஆசனங்களில் காங்கிரஸ் உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர்.

எதிர்க்கட்சியினர் வரிசையில் முன்னாள் பிரதமர்கள் வி. பி. சிங், சந்திரசேகர் ஆகியோர் காணப்பட்டனர். முதன் முறையாக நேரு குடும்பத்தைச் சேர்ந்த எவரும் சபையில் காணப்படாமை குறிப்பிடத்தக்கது

புதிய சபாநாயகர் தெரிவுக்கான தேர்தல் இன்று சபையில் நடைபெறும் காங்கிரஸ் சார்பில் சிவராஜ்பாட்டீலும், பாரதிய ஜனதா சார்பில் ஜஸ்வன் சிங்கும், தேசியமுன்னணி, இடதுசாரிகள் சார்பில் ரபிராய்யும் போட்டியிடுகின்றனர்.

### கொழும்பில் உள்ள

## பருத்தித்துறை டிப்போ ஊழியருக்குக் கெடுபிடி

கொழும்புப் பகுதிகளில் பொலிஸாரின் சோதனையின் போது பருத்தித்துறை பஸ் ஊழியர்கள் என அடையாள அட்டை மற்றும் விசாரணை மூலம் தெரிய வருபவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக அங்கிருந்து வருவோர் தெரிவித்தனர்.

கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பையடுத்து பருத்தித்துறை பஸ் சாலை ஊழியரில் ஏற்பட்ட சந்தேகத்தையடுத்தே இவ் ஊழியர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் சிலர் விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பில் தற்போது ஏற்பட்டுள்ள இந் நடவடிக்கையால் தமது அலுவல்களுக்காகச் சென்ற பருத்தித்துறைச் சாலை ஊழியர்கள் வடக்கே திரும்புகின்றனர். 38

## பொதிகளுடன் செல்ல உணவுவிடுதிகளில் தடை!

கொழும்பில் உள்ள உணவு விடுதிகளுக்கு பை, பொதிகளுடன் உட் செல்ல உரிமையாளர்கள் தடை விதித்துள்ளனர்

இதேபோல வீதிகளில் பை, பொதிகளுடன் கண்டபடி செல்வோர் மீதும் பொலிஸார் சந்தேகக் கண்ணோட்டம் விடுவதாகவும் தெரிய வருகிறது.

குப்பை கூழங்களை அகற்றும் மாநகரசபைத் தொழிலாளிகள் அப்பகுதியில் காணப்படும் பெட்டிகள், தகரங்களை அகற்றுவதில் தயக்கம் காட்டுகிறார்கள். (38)

### ரமதாஸ் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

## தமது அரசை மிரட்டமுடியாது என்கிறார் ஜெயலலிதா

உண்ணாவிரதமிருந்த பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் தனது உண்ணாவிரதத்தை நேற்றுக் கைவிட்டுள்ளார்.

முன்னதாக முதலமைச்சர் ஜெயலலிதா உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கோரியிருந்தார். தம்மைச் சந்திக்க வந்த பாட்டாளி மக்கள் கட்சி பிரமுகர் இருவர்களிடம் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

புதிய அரசை வன்முறைகள்கொண்டுமிரட்டமுடியாது பெண் ஒருவர் முதலமைச்சராக வந்ததையிட்டு பொறாமை கொண்ட சிலரே வன்முறையை ஏவிவிடுவதாக ஜெயலலிதா குறிப்பிட்டார்.

**வோய்ஸ்...**

படுவதற்கான நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இதற்கான நில அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சிலாபம் மேற்றிராசனம் ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து இந்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

அண்மையில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழு ஒன்று சிலாபம் ஆயர் அதிவண மார்க்கஸ் பெர்ணான்டோவைச் சந்தித்துப் பேசி அனுமதியைக் கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

**ஹெலி சூடு**

ஹெலிகொப்டர் ஒன்று சுற்றிவட்டமிட்டு கடும் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டது. 79

**வவுனியாவில்...**

கள் வழியில் பல இடங்களில் மறித்து சோதனையிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

**கட்சி...**

வித்தனர்.

கட்சியின் தலைவரும் சுதந்திரக்கட்சியின் ஆதரவாளருமான சந்திரசேகர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதுதெரிந்ததே

**கொழும்பு**

வீதித்தடை போட்டு வழிமறித்தனர்.

கார்ச்சாரதியான இளைஞன் காரை நிறுத்தாது தடைகளூடாகக்காரைச் செலுத்தி வேகமாக ஓட்டினார்.

பொலிஸார் சிலர் தமது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு காரை விரட்ட ஆரம்பித்தனர். நெடுந்தூரம் விரட்டிய போதும் காரை ஓட்டிய இளைஞனின் லாவகம் பொலிஸாரால் காரை எட்ட முடியாது போனது.

காரில் இளைஞனும் ஒரு யுவதியும் இருந்ததாகவும் இவர்கள் விடுதலைப்புலி சந்தேக நபர்களாக இருக்கலாம் என பின்னர் பொலிஸார் தெரிவித்தனராம்.

கார் தொடர்பான விவரங்கள் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. 38

**பொறுப்பானவர்...**

களாக இருப்பதும் அவர்களுடைய இந்த செயலுக்கு நியாயம் கற்பிக்கக் கூடிய வழிவகைகளை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தேடிக்கொள்வதும் இவ்வாறான சம்பவங்கள் சரியாக விசாரிக்கப்படாததும், பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படாததுமே காரணம் என மேலும் அவ்வதிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப 11)

**கிளிநொச்சி..**

ளாக்கப்பட்ட நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ப-6

**ஸ்ரீலங்கா—**

சுங்க அதிகாரிகள் கப்பலினுள் ஆயுதங்கள்இருப்பதைக்கண்டு பிடித்தனர்.

கப்பல் மூலம் விடுதலைப் புலிகளுக்கே ஆயுதம் வந்துள்ளதாக அறிவித்த சுங்கப் பகுதியினர் ஆயுதங்களை உடனடியாக இறக்கி இராணுவ ஆயுதசேமிப்புக் கிடங்குக்கு எடுத்துச் சென்று விட்டனர்

இதைத் தொடர்ந்து தாய்வான் அரசு அவ்வாயுதங்கள் தமக்கே வந்ததாகவும் ஹெலிகளுக்கு பொருத்தப்படும் ரொக்கட்டுகள் போராளிகளுக்கு போவதற்கான சாத்தியம் இல்லை எனவும் ஸ்ரீலங்கா அரசுக்கு சுட்டிக் காட்டியது.

எனினும் தாய்வானின் கோரிக்கையை அரசு ஏற்காததையடுத்து தாய்வான் தற்போது ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளது.

தாய்வானின் பாதுகாப்புக்கென கொண்டுசெல்லப்பட்ட ஆயுதங்களை ஸ்ரீலங்கா அரசு பறிமுதல் செய்தமை ஸ்ரீலங்காவின்பாதுகாப்பைப்பாதிக்கலாம் என தாய்வான் பத்திரிகை ஒன்று எச்சரித்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.


## காலமானார்

### தவில்மேதை இணுவையூர் என். ஆர். சின்னராசா

லயஞானபூபதி என். ஆர். சின்னராசா அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. என். இரத்தினம், திருமதி பாக்கியம் இரத்தினத்தின் அருமை மகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரன், முரளீதரன் (U. K.), கோபிதரன், திருமதி K. ரஜனி, நரேந்திரன் (இந்தியா), சுதாகரன். ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. ந கேதீஸ்வரன் (பொறியியலாளர்)அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி கமலாம்பாள், காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் N. R. கோவிந்தசாமி, காலஞ்சென்ற திருமதி செல்லம்மா, திருமதிகள் ஜெகதாம்பாள், சத்தியபாமா. சாரதாம்பாள். வேதநாயகி, நாதஸ்வர வித்துவான் N. R. சந்தானகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கோவிந்தராஜா, திருமதி தனபாக்கியம். காலஞ்சென்ற பெரியநாயகம், திருவாளர்கள் சுப்பிரமணியம், கணேசன், வாதவூரன், விநாயகமூர்த்தி, திருமதி யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 11-7-91 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், கலையுலகநண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
மனைவி, மக்கள்
மருமகன்

இணுவில்

07051



## காலமானார்

### சுப்பிரமணியம் நவமணி

வண்ணார்பண்ணை கேசாவில்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நவமணி (6.07.91) இரவு காலமானார். இவர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், லோகநாதன் (யாழ் மாநகரசபை பிரதம மின்மானி வாசிப்பாளர்),கனகேஸ்வரி, ஏகாம்பரநாதன் (சோலைவரிப்பகுதி நடுக்கட்டு உத்தியோகத்தர், யா/ சாரணர் சங்க உ. மா ஆ. ச. சே) பேரின்பநாதன், ருக்குமணிதேவி (யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்), நாகேஸ்வரி, குகநாதன் ஆகியோரின் தாயாரும் தியாகராசா (மெக்கானிக்), புஷ்பராணி, தேவராணி, யோகமலர், பாலகிருஷ்ணன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கச்சேரி யாழ்ப்பாணம்), பூபாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும், பூமணியின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (10.07.1991) இன்று புதன்கிழமை நடைபெறும் என ஏற்கனவே நேரடியாகவும் உறவினர் மூலமாகவும் அறிவித்திருந்த போதும் சில தவிர்க்க முடியாத காரணத்தினால் (11.07.1991) நாளை பி ப 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடாத்தப்பட்டு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சு. லோகநாதன்
41. கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

07052


இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 10.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.